www.padippakam.com




# சுண்டூர் கோரக் கொலைகள்

ஆகஸ்டு 6, 1991

(ஆந்திரப்பிரதேச சிவில் உரிமைக் கமிட்டி அறிக்கை)

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

அதிர்சியூட்டும் கோரமான கொலைவெறி. நெஞ்சை நெகிழவைக்கும் சம்பவம். நிதர்சனமான அரிய பாடம். இப்படிப் பல உண்மைகளைச் சொல்லுகிறது சுண்டூர் படுகொலை.

சுண்டூரில் ரெட்டிகள் நடத்திய கொலை வெறியாட்டத்தில் இருந்து தப்பிக்கத் தலைதெறிக்க ஓடினார் தாயாரி தனராஜ் என்கிற தலித்து. ஐந்து கிலோ மீட்டருக்கு அப்பால் காத்திருந்த மந்துரு கிராம ரெட்டிகளால் தாக்கி கால்கள் முறிக்கப்பட்டார். ஆனால் கொல்லப்படவில்லை. காரணம் கருணை அல்ல. தனது கைகளால் ஒரு தலித்தையாவது கொல்ல விரும்பினானாம் மல்லிகார்ஜுன ரெட்டி. அவன் ஒரு ஊன முற்றவன். அவன் ஆசையை நிறைவேற்றுவதற்காக ஊசிமூலம் ஒரு புட்டி ரத்தத்தை உறிஞ்சி எடுத்துக் கொண்டு தாயாரி தனராஜுவைக் குற்றுயிரும் குலை உயிருமாகப் போட்டுவிட்டு மல்லிகார்ஜுன ரெட்டியை அழைத்துவரப் போய்விட்டார்கள் ரெட்டிகள். ஊர்ந்து கொண்டே போன தாயாரி தனராஜ் கோதாவரி கால்வாயில் விழுந்தார். அடுத்திருந்த அலப்பாடு கிராமத் தலித்துப் பெண்மணிகள் அவரைக் காப்பாற்றி, பின்னிரவில் ஒரு பெண்ணைப் போல ஆடை உடுத்தி மருத்துவமனைக்குக் கொண்டு போனார்கள். என்ன கோரமான கொலை வெறி!

சுண்டூர் படுகொலை நேரில் கண்டவர்களுக்குத் தாளமுடியாத பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. தனது தம்பியின் பிணத்தைக் கண்ட பரிசுத்தராவ் மாரடைப்பால் மாண்டுபோனார். பிரேதப் பரிசோதனை நடத்திய தலித்து மருத்துவர் துக்கம் தாளாமல் தற்கொலை செய்து கொண்டார் எவ்வளவு பெரும் வேதனை ஏற்பட்டிருக்கும்!

அதேசமயம் சுண்டூர் படுகொலைகள் தலித்துக்களுக்கும், தலித்துக்களின் விடுதலைக்குப் போராடுபவர்களுக்கும் ஓர் அரிய பாடத்தைக் கற்றுக் கொடுத்திருக்கிறது. பொருளாதார ரீதியிலும் கல்வி ரீதியிலும் முன்னேறி விடுவதாலேயே தலித்துக்கள் சுயமரியாதையையும், சமூகத் தகுதியையும், சமூக சமத்துவம் - விடுதலையையும் அடைந்துவிட மடியாது. ஆயுதந்தாங்கிய ஓர் அரசியல் புரட்சியின் மூலமாக அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றாமல் தலித்துக்கள் உண்மையான விடுதலையைப் பெறவே முடியாது; அடிமை வாழ்வில் இருந்து விடுபடவே முடியாது. எல்லா மாயைகளையும் களைந்து விட்டு அத்தகைய புரட்சிக்கு அணிதிரள்வோம் என்பதுதான் சுண்டூரில் உயிர் பலி கொடுத்த தலித்துகளுக்கு நாம் செலுத்தும் வீர வணக்கமாகும்.

— புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி.

---

**படியுங்கள்!**

புதிய ஜனநாயகம்

புதிய கலாச்சாரம்

படிப்பகம்

www.padippakam.com

# சுண்டூர் கோரக் கொலைகள்

ஆகஸ்டு 6, 1991.

## கரம்சேடிலிருந்து சுண்டூர் வரை

சுண்டூர் படுகொலை நாட்டின் முழு கவனத்தையும் ஈர்த்துள்ளது; ஏனெனில் ஆந்திரப் பிரதேசத்தின் அண்மைக் கால வரலாற்றில் இதற்கு இணையான நிகழ்ச்சி எதுவுமே நடந்தது இல்லை. தென் இந்தியாவைப் பொறுத்தவரை கீழ்வெண்மணிக்குப் பிறகு தலித்துகள் பெருமளவில் படுகொலை செய்யப்பட்டது இங்குதான் என்றால் மிகையாகாது. இங்குதான் இப்படுகொலையைப் பற்றி முழு விவரமும் கீழே தரப்பட்டுள்ளது. இங்கு 'தாழ்த்தப்பட்டவர்கள் மீதான கொடூரங்கள்' என்ற அதிகரித்து வருகிற பொதுவான நிகழ்ச்சிப் போக்கின் சில முக்கியமான அம்சங்கள் குறித்து கவனத்தை ஈர்க்க விரும்புகிறோம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் தனது 17வது பிரிவின் வாயிலாக சட்டப்பூர்வமாகத் தீண்டாமையை ஒழித்துள்ளது. கல்வி, வேலைவாய்ப்பு, இயற்கை வளம், பொது வசதிகளுக்குரிய வாய்ப்பு போன்ற குறிப்பான விவகாரங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாட்டின்மையை அடிப்படை உரிமையாக 15, 16வது பிரிவுகள் உறுதிப்படுத்துகின்றன. வேறெந்த நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தோடும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாத அளவுக்கு இந்திய உரிமைச் சட்டத்தில் இருக்கும் மேற்கண்ட பிரிவுகள் உள்ளன. ஆனால், உலகின் வேறு எந்த நாட்டின் சமூக வரலாற்றிலும், இந்தியாவில் நிலவும் சாதிக் கட்டமைப்பு போன்ற வெறுத்து ஒதுக்கத்தக்க கட்டமைப்பும் ஏதுமில்லை.

தீண்டாமையினால் விளையும் குறிப்பான குற்றங்களுக்கான தண்டனைகளை மக்கள் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் வரையறுத்துள்ளது. அதே நேரத்தில், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினருக்கான ஆணையாளர் நாட்டிலுள்ள பல்வேறு இடங்களில் நிலவுகின்ற தீண்டாமை பற்றி வழக்கமாக வருகின்ற அறிக்கைகளைத் தொகுத்தும் வருகிறார்.

இருப்பினும், காலம் செல்லச் செல்ல நாடு ஒரு சீர்குலைந்த வளர்ச்சிப் பாதையில் செல்லத் தொடங்கியவுடன், தீண்டாமை ஒழியாதது மட்டுமல்ல; சுதந்திரமடைந்த இருபது ஆண்டுகளின் இறுதியில் 'தலித்துகள் மீதான கொடூரங்கள்' என்று இன்று நாம் கூறும் புதிய பரிமாணம் பிறந்து விட்டது. இதற்குமுன் கும்பலாகத் தாக்கப்படுதல், கலகம், கொலை, கற்பழிப்பு போன்ற கொடூரங்கள் தலித்துகள் மீது நடத்தப்படவேயில்லை என்பதல்ல; ஆனால் இத்தகைய கொடூரங்கள் பெருமளவிலும், திரும்பத் திரும்ப நடைபெறுவது நிச்சயமாக ஒப்பீட்டு ரீதியில் அண்மைக்கால சமூக நிகழ்வுதான்.

எனவேதான், அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 15, 16, 17 மற்றும் மக்கள் உரிமைச் சட்டங்கள் மட்டும் போதாது என்று உணர்ந்து, இத்தகைய கொடூரங்களைத் தடுப்பதற்கு

என்றே 1989ல் புத்தம் புதிய சட்டமாக தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் (கொடூரங்கள் தடுப்புச்) சட்டம் இயற்றும் நிலைக்கு பாராளுமன்றம் தள்ளப்பட்டு விட்டது. அதன் உட்கூறுகளைப் படிக்கும் போது அண்மைக்கால கிராமப்புற இந்திய வரலாற்றினுடைய ஒரு முக்கியமான பரிமாணத்தின் வெளிப்பாடு கிடைக்கும். அந்தச் சட்டத்தில் வரிசையிடப்பட்டிருக்கிற சொல்ல முடியாத கொடுங் குற்றங்கள் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாதவை. நாள் தவறாது அவையெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களின் மீது இழைக்கப்பட்டு பத்திரிகைகளில் வெளி வந்திருக்காவிட்டால் எந்தச் சட்டமியற்றுபவரும் அவற்றைக் கனவிலும் எண்ணியிருக்க இயலாது.

இந்தப் பிரச்னையில் அரசியல், பொருளாதாரக் காரணங்களுக்கு ஆழமாய்ச் செல்லத் தேவையில்லை. மனித உரிமைகள் என்ற முக்கியமான நோக்கு நிலையிலிருந்து அவற்றை கருத்தில் கொள்வதே போதுமானதாகும். தலித்துகள் தங்கள் தலைவிதி இவ்வளவுதான் என்று நொந்து கொண்டு, தங்கள் தலைவிதியை ஏற்றுக் கொண்டு இருக்கும் வரை மேல்சாதிக் காரர்களால் தலித்துகள் மிகத் தாழ்ந்த விலங்குகளாய் பூச்சிகளாய் கருதப்பட்டு சகித்து கொள்ளப்படுவார்கள்; கும்பலாகத் தாக்கப்படுவதற்கும், கொலை -கற்பழிப்புக்கும் தலித்துகள் இலக்காக்கப்பட மாட்டார்கள்.

ஆனால், தலித்துகள் தங்கள் தலையை நிமிர்த்தி மதிப்பையும், உரிமையையும் நிலைநாட்டத் தொடங்கிவிட்டால் மேல்சாதிக்காரர்களால் சகிக்க முடியாதவர்களாக ஆகிவிடுகின்றனர். இன்று தலித்துகளின் மத்தியில் கணிசமானவர்கள் தாங்கள் இழிநிலையில் இருப்பது தங்கள் தலைவிதி என்பதை ஏற்க மறுக்கின்றனர்; அது வரலாற்று ரீதியான அநீதியின் விளைவே என்பதை ஆய்ந்து அறிந்து கொள்கின்றனர். நிலம், பொருளாதார மேன்மை, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் இவை எல்லாவற்றுக்கும் மேலாக சமூக ரீதியிலான சமத்துவத்தையும், மதிப்பையும் இன்று இவர்கள் கோருகின்றனர். இப்படி தலித்துகள் தங்கள் உரிமையை நிலைநாட்டுவது மேல்சாதிக்காரர்களால், பணமும், அதிகாரமும் இல்லாத மேல் சாதிக்காரர்களாலும் கூட சகிக்க முடியாததாக இருக்கிறது.

அரசியல் சீரழிவு, பொருளாதார நெருக்கடிகளின் ஊடே இம்மாற்றங்கள் நடந்தேறுகின்றன. ஒரு ஜனநாயக அரசியல், ஆரோக்கியமான பொருளாதாரம் இருக்குமேயானால், தலித்துகளின் சுயஉரிமை நிலைநாட்டுவது மேல்சாதியினருக்கு எவ்வளவு கசப்பானதாக இருந்த போதிலும் ஒப்பீட்டு ரீதியில் சமூகமாக ஏற்றுக் கொள்ளச் செய்திருக்க முடியும். உண்மையில் அப்படி ஏற்படக் கூடியதே ஓர் ஆரோக்கியமான ஜனநாயகச் சமூகம் நிலவுவதின் ஆதாரமாக இருக்கும். ஆனால் நம்மிடமிருப்பதோ, முழுக்கவும் நெருக்கடிகள் நிறைந்த பொருளாதாரமும், அரசியலும் ஆகும். ஏதாவது மிச்சம் மீதி இருக்கிற ஜனநாயகம் கூட குண்டர்களின் தாக்குதலுக்குண்டான ஜனநாயகமாக மாற்றி வைக்கப்பட்டிருக்கிறது.

பல்வேறு வடிவங்களிலான பொருளாதாரச் சிக்கல்கள், அரசியல் ரௌடியிசம், தலித்துகள் சுயஉரிமைக் கோருவதை சகிக்க முடியாத மேற்சாதியினர் ஆகிய அனைத்தினுடைய கூட்டு மொத்தமும் 'தலித்துகள் மீதான கொடூரங்களின்' ஒவ்வொரு நிகழ்ச்சியின் பின்னும் காணப்படுகிறது. பின் விளைவுகளை எதிர்பாராமல் மண்டல் கமிஷனை எதிர்த்து நாடு முழுவதும் வெடித்துக் கிளம்பிய போராட்டங்களிலும் இதைக் காணமுடியும்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பே ஆந்திராவிலுள்ள கிருஷ்ணா மாவட்டத்தில் காஞ்சிக சேர்லாவில் நடந்த கோடேசு படுகொலைதான் இந்த நிகழ்ச்சிப் போக்கின் தொடக்கமாக கருதப்படுகிறது. ஆனால் அண்மைக்கால தலித்துகளுக்கு எதிரான கொடூரங்கள் ஜூலை 17, 1985ல் நடந்த கரம்சேடு கொலைகளில் தொடங்கிற்று. அன்று கம்மா சாதியினைச் சேர்ந்த ஆயுதத் தாங்கிய இளைஞர் கும்பலால் ஆறு தலித் இளைஞர்கள் வெட்டிக் கொல்லப்பட்டார்கள்; மூன்று தலித் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள்.

www.padippakam.com

அப்பொழுது ஆட்சியிலிருந்த என்.டி.ராமராவின் அமைச்சரவையில் கம்மா சாதியினர் அதிக விகிதாச்சாரத்தில் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டது; மற்றும் கரம்சேடு அவரது மருமகனின் ஊரும் ஆகும். இப்போது சுண்டூரின் சம்பவத்திலும் இன்றைய ஜனார்த்தன ரெட்டியின் அமைச்சரவையில் 50 சதவீதத்துக்கு மேலாக ரெட்டி சமூகத்தினர்கள் என்பதும் தலித்துகள் படுகொலை செய்யப்படுவது தற்செயலாக நடந்த நிகழ்ச்சி எனக் கருத இடமளிக்கவில்லை.

கரம்சேடு படுகொலையிலிருந்து தொடங்கி சுண்டூர் வரையிலான தலித்துகள் மீது மேல்சாதியினர் நடத்திய படுகொலைகள், உயிரோடு கொளுத்திய சம்பவங்களைப் பட்டியலிட்டு பின்பகுதியில் இணைப்பாகத் தந்திருக்கிறோம். இப்பட்டியலும் முழுமையானது அல்ல; ஏனெனில், பெரும்பாலான தனிப்பட்ட கொலைகள் 'தலித்துகள் மீதான கொடூரங்கள்' என்ற வகையில் பொதுமக்கள் கவனத்தில் வராமலே போய் விடுகின்றன. கொலைகாரர்கள் சில தலித்துகளையே கூட்டுச் சேர்த்துக் கொள்வதிலோ அல்லது வாடகைக்கு அமர்த்திக் கொள்வதிலோ வெற்றி பெறுகிற பொழுது பொதுமக்கள் கவனத்துக்கு வராமல் போய்விடுகிறது என்பது குறிப்பான உண்மையாகவும் இருக்கிறது.

இந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய சில உண்மை விவரங்களை இங்கு சுருக்கமாகக் குறிப்பிடுகிறோம். ஒன்று, கிட்டத்தட்ட எல்லா நிகழ்ச்சிகளிலுமே தாக்குகிறவர்கள் மேற்சாதியைச் சேர்ந்த சில நபர்களாக மட்டுமே இல்லை; மாறாக ஆட்சி அதிகாரத்திலிருக்கும் அரசியல்வாதிகளின் உறவினர்களாகவோ, அல்லது அவர்களுடன் அரசியல் தொடர்புடையவர்களாகவோ உள்ளனர்.

இரண்டாவதாக, எல்லா நிகழ்ச்சிகளிலுமே தாக்குகிறவர்களுக்கும், தலித்துகளுக்குமிடையே முன் விரோதம் இருப்பது பற்றியும், பதட்ட நிலை நிலவுவது பற்றியும் போலீசுக்கு தெரிந்து இருந்தாலும் கலவரத்தை தடுப்பது கிடையாது. உண்மையிலே, சுண்டூரில் நடந்தது போல, மற்ற எல்லா கலவரப் பகுதியிலேயும் போலீசு இருந்த போதும் கூட தாக்குதல்களை தடுப்பதற்கு ஒன்றுமே செய்வதில்லை. இன்று பதட்டம் நிலவும் கிராமத்தில் போலீசு இருப்பதே உண்மையிலேயே தங்களுக்கு எதிரானது என்று குற்றஞ்சாட்டுகிற கட்டத்திற்கு தலித்துகள் வந்து விட்டார்கள். ஏனெனில் போலீசின் தலையீடு என்பது தலித்துகள் தாக்கப்படும் போது அவர்கள் எதிர்த் தாக்குதல் தொடுக்க இயலாதவாறு கட்டுப்படுத்தும் அதே வேளையில், மேற்சாதியினரை எந்த விதத்திலும் கட்டுப்படுத்துவதில்லை. போலீசு மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் கூட, தாங்கள் நேரடியாக நேர்மையான சண்டை போட்டிருக்க முடியும் என்று தலித்துகள் இன்று கருதுகிறார்கள். நீடித்த பதட்டமும், முரண்பாடுகளும் நிலவுகின்ற எல்லாக் கிராமங்களிலும் தலித்துகள்தான் போலீசால் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்படுகிறார்களே ஒழிய, மேற்சாதியினர் மீது போலீசு நீக்குப் போக்கான முறையைத்தான் கையாளுகிறது. இப்போக்கு தலித்துகளின் உணர்வில் பெரும்பாதிப்பும், மனந்தளர்தலும் ஏற்படுத்துகிறது.

மூன்றாவதாக, தாக்குதலுக்குப் பிறகு போலீசின் நடவடிக்கை மந்த கதியிலேயே இருக்கிறது. தாக்குதல் நடத்திய முக்கிய குற்றவாளிகளை போலீசு கைது செய்வதேயில்லை என்று சொன்னால் அது மிகையாகாது. சுண்டூரில் கூட; 70 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டாலும், முக்கியமான குற்றவாளிகள் பெருமளவில் வெளியில் சுதந்திரமாக இன்னும் உலாவி வருகின்றனர். சுண்டூர் போலீசு எஸ்.பி. திரு.மீனாவும், டி.ஐ.ஜி. திரு.அரவிந்த ராவும் நக்சலைட் பாதிப்பு பகுதிகளில் இரக்கமற்ற முறையில் கடும் நடவடிக்கை எடுத்தவர்கள் என்று 'பிரபலம்' அடைந்தவர்களாக இருக்கிறபோதே இவையெல்லாம் நடந்திருக்கிறது. குற்றவாளிகள் இரண்டொரு மாதங்கள் தலைமறைவாக இருந்துவிட்டு தாங்களாகவே வந்து சரணடைந்ததுதான் எல்லா சம்பவங்களிலும் நடந்திருக்கிறது.

நான்காவதாக, நீதி கிடைப்பது என்பதும் ஆமை வேகத்திலேதான் நடக்கிறது. கரம்



படிப்பகம்

www.padippakam.com

சேடு படுகொலைச் சம்பவம் ஆறு ஆண்டுகளுக்கு முன் நடந்தது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் குறைந்தது 20 பேரையாவது தண்டிக்குமளவுக்குப் போதிய ஆதாரம் இருப்பதாகவே கரம்சேடு வழக்கைக் கையாளும் சட்ட வல்லுநர்கள் கருதுகிறார்கள். இன்று அவ்வழக்கு நடந்து முடிந்து குற்றவாளிகள் மீது தண்டனை நிறைவேற்றியிருப்பார்களேயானால் நிச்சயமாக சுண்டூர் கொலைகாரர்களின் மனதில் பாதிப்பு ஏற்படுத்தி தடுத்திருக்கலாம். ஆனால், ஆறாண்டுகளுக்குப் பின்னரும், கரம்சேடு வழக்கு இனிமேல் தான் தொடங்கப்பட வேண்டியிருக்கிறது. புலிவெந்துல சம்பவ வழக்கில் சம்பந்தப்பட்ட காங்கிரஸ் புள்ளி ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டி, ஜீருபாலம் வழக்கில் கோர்ல ஸ்ரீ ராமுலு நாயுடு, அம்பாரிப்பேட் கொலை வழக்கில் ஜி.நாராயண ரெட்டி, திம்ம சமுத்திரம் சூறையாடல், தாக்குதல் வழக்கில் சம்பந்தப்பட்ட தெலுங்கு தேசக் கட்சியின் புள்ளி கர்ணம் பலராமகிருஷ்ணமூர்த்தி போன்ற அரசியல் ரீதியாக செல்வாக்குடையவர்கள் நேரடியாக குற்றங்களில் பங்கேற்றிருப்பினும் அவர்கள் மீது சடங்குப் பூர்வமான வழக்குப் பதிவு கூட போலீசு செய்யவில்லை.

இந்த விவகாரத்தில் அரசாங்கம் மேற்கொண்ட அணுகுமுறையே மேலே குறிப்பிடப்பட்ட தாழ்த்தப்பட்டோர் -பழங்குடியினர் (மீதான கொடூரங்கள் தடுப்புச்) சட்டத்துக்கு நேர்ந்த தலைவிதியை ஒரு நோய்க் குறியாகச் சித்தரித்து விடுகிறது.

இரண்டாண்டுகளுக்கு முன் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இன்று வரை தலித்துகள் மீதான கொடூரங்களின் ஒரு பெரிய வழக்கு கூட இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படவேயில்லை. குறைந்தது ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு நீதிமன்றங்களும், சிறப்பு பிரிவு நீதிபதிகளும் நிறுவப்பட வேண்டும் என்று இச்சட்டம் மாநில அரசை வலியுறுத்தி வகை செய்கிறது. ஆனால், இன்றுவரை ஒரு சிறப்பு நீதிமன்றமும் நிறுவப்படவேயில்லை. சுண்டூர்ப் படுகொலைக்குப் பின்பு சிறப்பு நீதிமன்றம் நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்த போது, மாநிலத்தின் மூன்று பகுதிகளுக்காக மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் நிறுவப்படும் என்று முதல்வர் மிகவும் கருணையோடு அறிவித்தார். ஆனால், மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 23 சிறப்பு நீதிமன்றங்கள் நிறுவப்பட வேண்டும் என்கிறது சட்டம். கடுமையான, சிறப்பான நடவடிக்கைகளின் வாயிலாக தாக்குதல்களை தவிர்ப்பதற்கென்றும், சமாளிப்பதற்கென்றுமே இயற்றப்பட்ட இத்தகைய சட்டத்தின்பால் அரசின் அணுகுமுறை மெத்தனமாக இருக்கும்பொழுது, தலித்துகள் மீது கொடூரங்களை கட்டவிழ்த்து விடுகிறவர்கள் சட்டத்திற்கு அஞ்சாமல் இருப்பது வியப்புக்குரியது அல்ல.

இறுதியாக, தெளிவான முறையில் சுண்டூர் படுகொலைக்குப் பிந்திய கால விஷயமாக, மேல்சாதி அகங்காரம் அதிகரித்தவாறு உறுதிப்பட்டு வருவதையும் நாம் குறிப்பிட வேண்டும்.

கரம்சேடு படுகொலைகளின் போது மேற்சாதியினர் அப்படுகொலையை நியாயப்படுத்த முனையவில்லை. ஆனால் சுண்டூர் படுகொலையை வெட்கமின்றி வெளிப்படையாக நியாயப்படுத்தி வாதிடவும், இன்னும் அதிகச் சுண்டூர்கள் பிறக்கும் என்றும் பிரகடனம் செய்கின்றனர். சர்வஜன் உதய போராட்ட சமிதி (அனைத்து மக்கள் நலனுக்கான போராட்டக் கமிட்டி) என்ற அமைப்பை மேல்சாதியினர் தோற்றுவித்து தலித்துகள் சுயஉரிமை கோருவது அரசின் ஒருதலைபட்சமான போக்குக்கு எடுத்துக்காட்டு என்று விளக்கி, இதற்கெதிராக ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், கடையடைப்புகளை நடத்தி வருகின்றனர். 'மேல்சாதியினர் ஒற்றுமை ஓங்குக', 'கத்தி பத்மராவை (தலித் மகாசபைத் தலைவரை)த் தூக்கிலிடுவோம்', 'ஒரு பிடி உணவுக்கு பிச்சை எடுக்கிறவனுக்கு அகங்காரம் இருக்கக் கூடாது' போன்றவை மேல்சாதியினரின் முழக்கங்களாக உள்ளன.

சுதந்திரத்திற்குப் பின், மண்டல் கமிசனுக்கு எதிராக எல்லா மேல்சாதியினரும் சாதியின் பெயரை வெளிப்படையாக சொல்லிக் கொண்டு கிளர்ச்சி செய்தபோது நீதிக்காக போராடுப



படிப்பகம்

www.padippakam.com

வர்கள் என்று பத்திரிகைகளாலும், அறிவி ஜீவிகளாலும் உயர்த்திப் பிடிக்கப்பட்டதின் பின் விளைவால்தான், சந்தேகத்திற்கு இடமின்றி மேல்சாதியினரின் ஒற்றுமை பலப்படுத்தப்பட்டுள்ளது. மண்டல் எதிர்ப்பு ஊர்வலங்களில் காணப்பட்ட அதே முகங்கள்தான், இன்று சுண்டூர் சம்பவத்திற்குப் பின் மேல்சாதியினர் நடத்திய ஊர்வலத்திலும் தென்படுகின்றன. ஏற்கனவே, குண்டூர் மாவட்ட போலீசு மேலாளர் (எஸ்.பி.) முன்னிலையிலேயே, தாழ்த்தப்பட்டோர் பெரும்பான்மையாகப் படிக்கும் குண்டூரிலுள்ள கல்லூரியில், மேல்சாதி மாணவர்கள் தலித் மாணவர்களின் புத்தகங்களையும், சான்றிதழ்களையும், உடைகளையும் எரித்துத் தாக்கியதில் வெளிப்பட்டு இருக்கிறது. வாரங்கல் பிராந்தியப் பொறியியல் கல்லூரியில் (REC) மண்டல் எதிர்ப்பு கிளர்ச்சியாளர்கள் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் அறைகளிலுள்ள உடமைகளை கொளுத்திய போது, போலீசும், அதிகாரிகளும் மகிழ்ச்சி ததும்பும் வெறும் பார்வையாளராகத்தான் இருந்திருக்கின்றனர்.

கடலோர ஆந்திராவின் கிருஷ்ணா, கோதாவரிப் பாசனப் பகுதிகளைப் போல எங்கெல்லாம் தலித்துகளின் சுயஉரிமையை நிலைநாட்டுவது மக்கள் திரள் தன்மையோடு பரவலாக உள்ளதோ, அங்கெல்லாம் சுண்டூர், கரம்சேடு ஆகிய இடங்களில் நடந்ததைப் போல கும்பலாகத் தாக்குப்படுவதற்குரிய சாத்தியக் கூறுகள் உள்ளன. கிருஷ்ணா, குண்டூர், பிரகாசம், மேற்கு -கிழக்கு கோதாவரி மாவட்டங்களிலுள்ள ஒன்றிரண்டு கிராமங்களில் அல்ல; டஜன் கணக்கிலுள்ள கிராமங்களில் இப்படிப்பட்ட தீப்பந்தங்கள் பற்றி பரவத் தயார் நிலையில் காத்துக் கொண்டு இருக்கின்றன. ராயலசீமா, தெற்கு தெலிங்கானா மாவட்டங்களில் எல்லாம் தலித்துகளின் சுய உரிமை நிலைநாட்டுவது ஒரு சில துணிவான தனிநபர்களுக்குரியதாக குறைந்து இருக்கிறது. இங்கெல்லாம் தாக்குதல்கள் மக்கள் தொடர்பு சாதனங்களை ஈர்க்காத தனி நபர்களின் கொலைகளாக வடிவம் எடுப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் உள்ளன.

எடுத்துக்காட்டாக, வடக்கு கடலோரத்தில் உள்ள விஜயநகரம் மாவட்டத்திலுள்ள சின்னக்கதா கிராமத்தில் ஒரே குடும்பத்திலுள்ள நான்கு பழங்குடியினர் 1989ல் கொல்லப்பட்டனர். இதே மாவட்டத்திலுள்ள கஸ்பகாடவலசா கிராமத்தில் நான்கு பழங்குடியினரும் ஒரு 'அரிசன'னும் 1990ல் கொல்லப்பட்டனர். இவையெல்லாம் யாருடைய கவனத்திற்கும் வரவில்லை. மேடக், மெகபூப் நகர், ரெங்கரெட்டி, நிஜாமாபாத் மாவட்டங்களில் அரசுக்கு எதிராக கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கும் தலித்துகள் சூனியக்கார மந்திரவாதிகள் என்று முத்திரை குத்திக் கொல்லப்படுகிறார்கள். இம்மாதிரி சம்பவங்கள் மேலும் குழப்பக் கூடியதாக இருக்கிறது.

இவையெல்லாம் ஆந்திராவில் நிலவும் சூழ்நிலையின் சுருக்கம் ஆகும். சாராம்சத்தில் பிற மாநிலங்களில் நிலவுவதற்கும் இதற்கும் வேறுபாடு இல்லை. அதிகரித்து வரும் தலித்துகளின் சுயஉரிமை நிலைநாட்டலை மேல்சாதியினரின் சகிப்பின்மையிலிருந்து பாதுகாக்க, வலிமையான நீடித்திருக்கின்ற ஜனநாயக இயக்கம் இப்பொழுது உடனடித் தேவையாக இருக்கிறது. அத்தகைய இயக்கம் தலித்துகளுக்கானதாக மட்டுமேயின்றி, பிற ஜனநாயக இயக்கங்களும் அதனுடன் இணைக்கப்பட வேண்டும். இவ்விஷயத்தில் ஆந்திரம் பிற மாநிலங்களைவிட சிறப்பான நிலையில் உள்ளது. வெள்ளமெனப் பொங்கும் விழிப்புணர்வு அலையும், தலித்துகள் மத்தியிலே மட்டுமேயன்றி, இவ்விஷயத்தில் அதிகம் அக்கறை செலுத்தும் வலிமையான, துடிப்புமிக்க ஜனநாயக இயக்கமும் ஆந்திரத்தில் உள்ளது. இக்கூறுதான் இருண்ட சூழலில் நம்பிக்கையளிப்பதாக உள்ளது.

## சமூகப் பொருளாதார கட்டமைவு

மேல்சாதியினர் தாக்குதலுக்குட்பட்டு எட்டு தலித்துகள் கொல்லப்பட்டும், குறைந்தது



படிப்பகம்

www.padippakam.com

9 பேர் காணவில்லை என்ற சூழ்நிலை நிலவும் சுண்டூரின் சமூகப் பொருளாதார கட்டமைவு என்ன? இதை பரிசீலிப்போம்.

தெனாலி - சென்னை ரயில் பாதையில் தெனாலி நகரிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் மண்டலத் தலைமையகமாக சுண்டூர் உள்ளது. 18 சதுர மைல் பரப்புள்ள சுண்டூரின் மக்கள் தொகை 5,800 பேர் ஆகும். இதில் தலித்துகளும், மேல்சாதியினரும் சம எண்ணிக்கையில் உள்ளனர்.

மேல்சாதியினரில் பெரும்பான்மையானவர் பெருமளவு நிலத்தைக் கொண்டிருக்கின்ற 800 குடும்பங்களைக் கொண்ட ரெட்டிகள். 225 தெலகா, 25 பிராமணர்கள், 15 வைசிய குடும்பங்களும் உள்ளன. தாழ்த்தப்பட்ட சாதியினரில் 400 குடும்பத்தினர் 'மாலா' பிரிவினர்; சுமார் 100 குடும்பங்கள் 'மாதிகா' பிரிவினர்; நூற்றுக்கு சற்று மேற்பட்ட (இருகுலா மற்றும் யானாதி) தாழ்த்தப்பட்ட பழங்குடியினக் குடும்பங்களும் உண்டு.

மற்றபிற கிராமங்களைப் போலன்றி சுண்டூரில் தலித்துகள் நன்கு படித்தவர்கள்; சிலர் அரசியல் பதவி வகிப்பவர்கள்; பலர் வேலையிலுள்ளவர்கள். மறுபுறத்தில், மேல்சாதியினரின் குறிப்பாக, ரெட்டிகள் மற்றும் தெலகாக்கள் குறைவான படிப்பறிவு உடையவர்கள். பெரும்பாலான இளைஞர்கள் 'டிராக்டர்' ஓட்டுவது, பண்ணைகளில் வேலை செய்வது போன்ற உதிரி வேலைகள் செய்பவர்கள்.

தலித்துகள் பாரம்பரிய முறைப்படி மேல்சாதியினருக்கு அடிமைப்பட்டு வந்தவரை ஒரு பிரச்சினையும் இல்லை. கல்வியறிவு பெற்ற தலித் இளைஞர்கள் பிறசாதியினரின் 'பிறப்பால் பெற்ற உரிமைகளை' எதிர்த்து சவால் விடத் தொடங்கினர். இதுதான் மேல்சாதியினருக்கும், தலித்துகளுக்குமிடையில் மோதல்கள் தொடங்கக் காரணம் ஆகும்.

ஒரு கிராமம் என்கிற முறையில் சுண்டூர் கிராமத்தில் கல்வியறிவு வீதம் அதிகம் ஆகும். இங்கு மூன்று தொடக்கப் பள்ளிகளும், ஓர் உயர்நிலைப் பள்ளியும் உள்ளன. கிட்டத்தட்ட 3000 பேருக்கு எழுதப் படிக்கத் தெரியும். இதில் பெருமளவு பெண்களும் அடங்குவர். 15 தலித்துகள் மேற்பட்டப் படிப்புப் படித்தவர்கள்; பலர் பட்டப்படிப்புப் படித்தவர்கள்; 200க்கும் மேற்பட்டவர்கள் மேல்நிலைப் பள்ளி வகுப்பு முடித்தவர்கள். ஆனால் இந்த அளவு கல்வி பெற்றவர்கள் மேல்சாதியில் அதிகம் இல்லை.

இக்கல்வியறிவு இயல்பாகவே தலித்துகள் வேலை வாய்ப்பு பெற உதவிற்று. கிட்டத்தட்ட 300 பேர்கள் ரயில்வேயில் 'பிட்டர்'களாகவும், மற்றும் 'கேங்மேன்' ஊழியர்களாகவும் உள்ளனர். சிலர் தொலைபேசித் துறையிலும், வங்கிகளிலும் உள்ளனர். சிலர் மண்டல வருவாய் அதிகாரிகளாகவும் உள்ளனர்.

கொஞ்ச காலமாக தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சில பத்தாண்டுகளுக்கு முன்பு வரை கொத்தடிமைகளாக இருந்தவர்கள், இப்போது குத்தகை விவசாயிகளாக மாறிவிட்டனர். இளைய தலைமுறையினர் கவுரவமான வேலைகளில் அமர்ந்துவிட்டனர். தலித் மக்களிடையே இப்படிப்பட்ட மாற்றத்தைக் கண்ட மேல்சாதியினர், இது தங்கள் அதிகாரத்துக்கும், செல்வாக்குக்கும் கேடென்று கருதினர். வழக்கம் போல தலித்துகளை முரட்டுத்தனமாக, மரியாதைக் குறைவாக இனிமேலும் அழைக்க முடியாது போனது. தேநீர் கடைகள், திரையரங்குகள் போன்ற பொது இடங்கள் தலித்துகள், மேல்சாதியினர் இருவரும் பயன்படுத்தும் பொதுவானதாக ஆகிவிட்டன.

உண்மையிலேயே, தலித்துகளின் இன்றைய தலைமுறை கல்வி பெறுவதை, மேல்சாதியினர் பல சந்தர்ப்பங்களில் தடுக்க முயன்றனர்; தேர்வு எழுதப் போதிய வருகைப் பதிவு இல்லை என்று பொய்யான காரணத்தைக் கூறி, தலித் மாணவர்கள் தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்கப்படவில்லை; தலித் மாணவர்கள் அதிகப் பேர் உள்ள கல்லூரிகளில் பலமுறை தாக்குதல்கள் தொடுத்தனர்; இம்மாதிரியான சிரமங்கள் இருந்த போதும் தலித் இளைஞர்கள்



படிப்பகம்

தங்கள் கல்வியைத் தொடர்ந்தனர். அக்கல்வி அவர்களுக்கு புதிய தகுதியைக் கொடுத்தது. அந்தத் தகுதி, மேல்சாதியினருக்கு மிகவும் சாதகமாக இருந்து வந்த, மிகவும் வசதியான பழைய அமைப்பில் இனி மேலும் பொருந்துவதாக இல்லை.

இதுவே ஆகஸ்ட் 6ல் நடந்த வெறியாட்டத்திற்கு காரணமாக அமைந்தது. ஏனெனில், திரையரங்கில் மேல்சாதிப் பையன் ஒருவன் உட்கார்ந்திருந்த இருக்கையில் படித்த தலித் இளைஞன் காலை நீட்டிவிட்டான் என்ற கால்காசுக்கும் பெறாத காரணத்திற்காக இச்சம்பவம் நடந்தது. இந்நிகழ்ச்சிக்குப் பின், தலித்துகள் சமூக ரீதியாக புறக்கணிக்கப்பட்டனர்; தலித் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும்பொழுது கிராமம் வழியாக செல்லக் கூடாது என்று தடுக்கப்பட்டனர்; தலித் கூலி விவசாயிகள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்; குத்தகைகள் ரத்து செய்யப்பட்டன; பொய்யான காரணங்களையெல்லாம் காட்டி தலித் இளைஞர்கள் அடித்து உதைக்கப்பட்டனர்.

கல்வியறிவு பெற்றிருந்தாலும், பொருளாதார ரீதியில் தலித்துகள் மேல்சாதியினரை விட மிகவும் பின்தங்கியுள்ளனர். ஏனெனில் பெருமளவு நிலங்களெல்லாம் மேற்சாதியின ருக்குச் சொந்தமாகவே இருக்கிறது. சுண்டூரில் 2400 ஏக்கர் பயிரிடத்தக்க நிலத்தில், 1200 ஏக்கர் நிலம் ரெட்டிகளுக்கும்; 250 ஏக்கர் நிலம் தெலகாக்களுக்கும்; 100 ஏக்கர் பிராமணர்க ளுக்கும்; 65 ஏக்கர் வைசியர்களுக்கும்; 250 ஏக்கர் சுற்றுப்புறக் கிராமங்களைச் சேர்ந்த மேல்சாதியினருக்கும் சொந்தமாக உள்ளது. தலித்துகள் வெறுமனே 90 ஏக்கர் நிலம் மட்டுந் தான் கொண்டுள்ளனர்.

தலித்துகளுக்கு குத்தகையாக விடப்பட்டுள்ள 100 ஏக்கர் நிலத்தைத் தவிர பெரும்பகுதி யான நிலம் மேல்சாதியினராலேயே பயிரிடப்படுகின்றது. கிருஷ்ணா ஆற்றுக் கால்வாய்ப் பாசனம் பெறும் இவ்வூரின் நிலத்தின் விலை ஏக்கருக்கு ரூ.60,000 முதல் ரூ.75,000 வரை மதிப்புடையது. குத்தகைக்காக விடப்படுகிற நிலத்துக்கு தலித்துகள் ஏக்கருக்கு ரூ.3,000 நில உடமையாளருக்கு முன் பணமாய்த் தர வேண்டும். குத்தகைதாரருக்கே மொத்த விளைச்ச லும் சொந்தம். திரையரங்கு நிகழ்ச்சிக்குப் பின்பு மேல்சாதியினர் எல்லாக் குத்தகைகளையும் ரத்து செய்துவிட்டனர். தலித் விவசாயிகள் சிலர் செலுத்திய முன் பணத்தையும் மேல்சாதியி னர் திருப்பிக் கொடுக்கவில்லை.

கரம்சேடு போலல்லாமல், சுண்டூரில் பெருமளவு நிலத்தை உடமையாகக் கொண்ட நிலப்பிரபுக்கள் சிலரே உள்ளனர். மண்டல வருவாய் அலுவலகப் பதிவேடுகளின்படி 1,100 பேருக்கு மேல் ஒரு ஹெக்டேருக்கும் குறைவாக நிலம் கொண்டவர்கள்; (இதில் 68 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், 12 பேர் பழங்குடியினர்). சுமார் 250 பேர் ஒன்றிலிருந்து இரண்டு ஹெக்டேர் நிலம் வரை கொண்டுள்ளனர். 85 பேர் மட்டுமே இரண்டு ஹெக்டேருக்கு மேல் நிலம் கொண்டுள்ளனர்.

சுண்டூரிலுள்ள மேல்சாதியினருக்கு சுற்று வட்டாரத்திலுள்ள மொதுக்குரு, வலிவேரு கிராமத்திலுள்ள ரெட்டிகள், தெலிகாக்கள் பெரிதும் உதவியாக இருந்ததாய் தலித்துகள் குறிப்பிடுகின்றனர். மொதுக்குருவிலுள்ள மொத்தம் 3300 ஏக்கர் விளையக் கூடிய நிலத்தில் 2600 ஏக்கர்களையும்; வலிவேருவில் மொத்தம் 3000 ஏக்கர்களில் 2300 ஏக்கர்களையும் ரெட்டிகள் உடமையாகக் கொண்டுள்ளனர். ஆகஸ்ட் 6ல் தலித்துகள் கொடூரமாக கொலை செய்யப்பட்டதில் இவ்வூர்களைச் சேர்ந்த பல மேல்சாதியினரும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள னர்.

சுண்டூரின் நிலைமை மற்ற கிராமங்களிலிருந்து இன்னுமொரு வகையில் வேறுபட்டிருக் கிறது. தலித்துகளில் சிலரே தங்கள் வாழ்க்கைக்காக மேல்சாதியினரைச் சார்ந்து நிற்கின்றனர். ஏற்கனவே குறிப்பிட்டது போல் பலர் வேலையில் இருக்கிறார்கள், ஒரு சிலரே சிறு விவசாயி கள். நிலக் கூலி விவசாயி கூட மேல்சாதியினர் கருணையை மட்டுமே நம்பியிருப்பதில்லை

www.padippakam.com

ஏனெனில் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு சிராலா, நரசராவ்பேட்டை போன்ற வெளியிடங்களுக்குக் கூலி வேலை செய்யப் போகிறார்கள். மேல்சாதியினரால் சமூக ரீதியாக திட்டமிட்டு புறக்கணிக்கும் போது, இதே போல இவர்கள் இடம் பெயர வேண்டியதாயிற்று.

பொருளாதார ரீதியில் பின்தங்கியிருந்தாலும் கூட தலித்துகள் அரசியல் ரீதியாக வெற்றிகரமான குழுவாய் உருவாக முடிந்துள்ளது. குண்டூர் மண்டல மக்கள் மன்றத்தின் தலைவர் இ.காங்கிரசைச் சேர்ந்தவர்; இவர் தலித் ஆவார். தலித்துகளும், மேல்சாதியினரும் அரசியல் ரீதியாக இ.காங்கிரசில் இணைந்து இருக்கிறார்கள். அம்ருதலூர், பொன்னூர், நகரம், இந்தூர் ஆகிய ரிசர்வ் தொகுதிகளில் மண்டலத் தலைவர்களாகத் தலித்துகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தலித்துகளின் இப்படிப்பட்ட சமூக விடுதலை காரணமாகத்தான் கிராமங்களில் தங்களின் ஆதிக்கம் மெதுவாக அழிக்கப்பட்டு வருகிறது என்று கருதினர். இது மேல்சாதியினருக்கு எரிச்சல் ஊட்டுவதாக ஆகிவிட்டது. சமூக ரீதியாக புறக்கணிப்பு செய்த போதும் கூட தலித்துகள் சுயஉரிமை நிலைநாட்டுவதும், சுதந்திரமாக இருப்பதும், மேல்சாதியினரை மேலும் பொறுமையிழக்கச் செய்தது. தலித் பெண்மணி ஒருவர் கூறுகிறார், ''நாங்கள் நாகரீகமாக வாழக் கூடாது. என்றென்றைக்கும் அவர்களுக்கு அடிமையாக வாழ வேண்டும். அதற்காக அவர்கள் எங்களுக்கு ஒரு பாடம் புகட்ட விரும்பியது தான்''... மேல்சாதியினர் தலித்துகளைத் தாக்கியதற்குக் காரணம் ஆகும்.

## நிகழ்ச்சிகளின் வரிசைக் குறிப்பு

தலித்துகளின் சுய உரிமை கோருவது மேல்சாதியினருக்கு சினத்தை உண்டு பண்ணுகிறது. அச்சினத்துக்கு வடிகாலாக ஜூலை 7ம் தேதி திரையரங்கில் நடந்த சிறிய நிகழ்ச்சி அமைந்தது. அதாவது, ரவி என்ற தலித் நாக்பூரில் பட்ட மேற்படிப்பு படிக்கின்ற இளைஞர். இவர் குர்ரி சீனிவாச ரெட்டி என்ற மேல்சாதிப் பையன் உட்கார்ந்திருந்த இருக்கையில் காலை நீட்டினார். இதனால் அவர்கள் இருவருக்குமிடையே சிறிய வாக்குவாதம் ஏற்பட்டது. அதில் சீனிவாச ரெட்டி ரவியை சாதிப்பெயர் சொல்லி திட்டினார். இந்நிகழ்ச்சிக்குப் பின் தலித்துகள் மீது தாக்குவதன் வாயிலாக மேல்சாதியினர் தங்கள் சினத்தை வெளிப்படுத்தினார்கள்.

திரையரங்கு நிகழ்ச்சிக்குப் பின் ரவி ஓங்கோல் என்ற ஊருக்குச் சென்று விட்டார். மறுநாள், குண்டூரின் அருகிலுள்ள முன்னாங்கிவாரிப்பாலம் கிராமத்தில் ஆசிரியராகப் பணிபுரியும் ரவியின் தந்தை பாஸ்கர ராவை, ரெட்டிகளின் கும்பல் ஒன்று கடத்திச் சென்றது. கொடுமையான சித்திரவதை செய்து அவருடைய மகன் ரவி எங்கே சென்றுள்ளான் என்று கேட்டு அறிந்து கொண்டது. அதாவது, அன்று மாலை சென்னை -ஹவுரா விரைவு ரயில் வண்டியில் ரவி ஊர் திரும்புகிறான் என்ற தகவலை அறிந்து கொண்டனர், மேல்சாதியினர்.

ரவி ரயில் வண்டியிலிருந்து இறங்கிய உடனே, தலித் இளைஞர்கள் சிலர் அங்கு சென்று, ரவியைப் பார்த்து மேல்சாதியினர் அவரைத் தாக்கக் கூடும் எனக் கூறி எச்சரித்தனர். தன் உயிருக்கு ஆபத்து என்று உணர்ந்த ரவி, அங்கிருந்து அருகாமையிலுள்ள பெத்தகாஜுலபள்ளி என்ற ஊருக்குச் சென்று தலித் ஒருவர் வீட்டில் ஒளிந்து கொண்டார். ரவி ஒரு வீட்டிலுள்ள தங்க நகைகளைத் திருடிவிட்டு, குண்டூரை விட்டு ஓடி ஒளிந்து கொண்டதாக மேல்சாதியினர் பொய்யான வதந்திகளைப் பரப்பி ரவி இருக்கும் இடத்தை அறிந்து கொண்டனர். மேல்சாதியினர் அங்கு சென்று, ரவியை அவ்வூரிலேயே இரக்கமின்றி அடித்தனர்.

அதற்குப் பின்பு 'டிராக்டரில்' ரவியை ஏற்றி குண்டூருக்கு அழைத்து வந்தனர். ரவியை குண்டூரிலுள்ள மண்டல வருவாய் அலுவலகத்தில் சிறிது நேரம் வைத்திருந்தனர். அப்பொழுது மறுபடியும் ரவியை அடித்தனர். மதுவை குடிக்கச் சொல்லி துன்புறுத்தினர். பின்பு



படிப்பகம்

www.padippakam.com

ரத்தக்காயங்களுடன் ரவி தெனாலி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். போலீசு மேல்சாதியினர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காத போதே, மேல்சாதியினர் ரவி மீது திருட்டுக் குற்றம் சுமத்தினர். இந்தச் சம்பவம் சுண்டூரின் பஞ்சாயத்து தலைவர் மொடுகுல சம்பி ரெட்டியின் முன்பே நடந்தது. இவரும் ஆகஸ்ட் 6ம் தேதி நடந்த தலித் படுகொலைக ளில் முக்கியக் குற்றவாளி ஆவார்.

மேல்சாதியினரால் தாங்கள் மேலும் தாக்கப்படுவோம் என்று அஞ்சிய ரவியோ அவ ரது தந்தையோ போலீசுக்கு புகார் கொடுக்கவில்லை. இச்செயலுக்காக தலித்துகள் பாஸ்கர ராவ் மீது கோபமடைந்தனர். மேலும், பாஸ்கரராவ் மேல்சாதியினருக்கு பணிந்து சென்றதால் தலித்துகள் அவரை கண்டித்து அபராதம் ரூ.25 விதித்தனர்.

ஜூலை 9ஆம் தேதி ரெட்டிகளும், தெலிகாக்களும் கமிட்டி ஒன்றை அமைத்து, மாலா சாதி தலித்துகளை சமூகப் புறக்கணிப்பு செய்ய முடிவு செய்தனர். இந்த கமிட்டிக்கு தலைவர் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்தான். அன்றிலிருந்து தலித்துகள் மேல்சாதியினரின் நிலத்தில் வேலை செய்யவோ, மேல்சாதியினரின் குடியிருப்புப் பகுதிகளில் நுழையவோ அனுமதிக் கப்படவில்லை. தலித்துகளின் குத்தகைகள் எல்லாம் ரத்து செய்யப்பட்டன.

தலித்துகளை சமூகப் புறக்கணிப்பு செய்தது பதட்ட நிலைக்கு இட்டுச் சென்றுவிட்டது. இக்கட்டத்தில் 144வது பிரிவுப்படி தடை சட்டம் அக்கிராமத்தில் அமுல் செய்யப்பட்டது. மேல்சாதியினர் வெளியூர் ஆட்களை வைத்து தங்கள் வயல்களில் வேலை செய்தனர். அதே சமயத்தில் தலித்துகள் தெனாலி, பொன்னூர் போன்ற ஊர்களுக்கு வேலை தேடிச் சென்றனர். தெனாலி கிராமிய சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சாய்பாபு தலைமையின் கீழ் 50 போலீசார் கொண்ட பலமான பாதுகாப்பு அக்கிராமத்தில் அன்றிலிருந்து போடப்பட்டது.

ஜூலை 12ம் தேதி இரவு, மேல்சாதியினர் மொதுக்கூர், திண்டிப்பாலம், வலிவேரு ஊர்களிலுள்ள ரெட்டிகளின் ஆதரவோடு சுண்டூரிலுள்ள தலித் குடியிருப்புகளை தாக்க முயன்றனர். தலித்துகளும் எதிர்தாக்குதல் தொடுக்கத் தயார் நிலையில் இருந்தனர். என்ற போதும், போலீசு தலையிட்டு இருதரப்பினர் மீதும் தடியடி நடத்திக் கலைத்தது; வானை நோக்கிச் சுடக் கூட செய்தது. மேல்சாதியினர் நடத்திய சோடாபாட்டில் வீச்சில், போலீசுக்கா ரர் ஒருவர் காயமடைந்தார்.

மறுநாள், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சாய்பாபு ஒரு சமாதானக் கமிட்டி அமைக்கிற முகாந் திரத்தில் தலித்துகளை அழைத்தார். அதன் பிறகு போலீசு 18 தலித்துகளையும், 18 மேல்சாதி யினரையும் கைது செய்தது. தொடர்ந்து மேலும் போலீசு 8 மேல்சாதியினரையும், 2 தலித்துக ளையும் கைது செய்து, வழக்குப் பதிவு செய்தது. கைது செய்யப்பட்ட எல்லோரும் ஜூலை 16 அன்று நிபந்தனை ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர். அதன்பிறகு, சுண்டூரில் சில நாட்களுக்கு எவ்வித நிகழ்ச்சிகளும் நிகழாமல் இருந்ததால், ஜூலை 29ல் தடையுத்தரவு நீக்கப்பட்டது.

மீண்டும் ஆகஸ்ட் 4ஆம் தேதியன்று தேநீர்க் கடையில் ராஜபாபு என்ற தலித் இளைஞர் செய்தித்தாள் படித்துக் கொண்டிருக்கும் பொழுது ரெட்டிகளால் தாக்கப்பட்டார். தாக்குதலில் ராஜபாபு காயம் அடைந்தார். போலீசு, குற்றவாளிகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக் காத போதே, தங்கள் பெண்களை வம்பிழுத்ததாக மேல்சாதியினர் குற்றஞ்சாட்டியதன் பேரில் போலீசு ராஜபாபு மீது வழக்குப் பதிவு செய்தது. தலித்துகள் திருப்பித் தாக்க முடிவு செய்தனர். ஆனால், அவ்வாறு செய்யாமலிருக்க தலித்துகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமான சீனிவாஸ் என்கிற சுண்டூர் சப்-இன்ஸ்பெக்டர் தலித்துகளைச் சமாதானப்படுத்தித் தடுத்து விட்டார்.

மறுநாள், யாக்கோபு என்ற தலித் நியாய விலைக் கடை ஊழியரை மண்டல வருவாய் அதிகாரி அழைப்பதாக செய்தி அனுப்பப்பட்டது. யாக்கோபு மேல்சாதிப் பகுதி வழியாக



படிப்பகம்

www.padippakam.com

வருவாய் அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருக்கும் போதே, ரெட்டிகளால் தாக்கப்பட்டார்; கத்தியால் குத்தப்பட்டார். சப்-இன்ஸ்பெக்டர் சீனிவாஸ் உடனே வந்து குத்தப்பட்ட யாக்கோபுவை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார். அன்றிரவே கூடுதல் போலீசுப்படை சுண்டூருக்கு அனுப்பப்பட்டது. மறுபடியும் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## இறுதித் தாக்குதல்

கடைசியாக ஆகஸ்ட் 6 அன்று காலையில் தலித்துகள் மீதான இறுதித் தாக்குதல் தொடங்கியது. இக்கொடிய நிகழ்ச்சி ஊரிலிருந்த போலீசு அதிகாரிகள் உதவியோடு மேல்சாதியினரால் முன் கூட்டியே திட்டமிட்டு திறமையாக நடத்தப்பட்டது. ஊரில் ஒரு மாத காலத்துக்கு மேல் பதட்டம் நிலவி வந்தது; அதனால் அங்கு தடையுத்தரவு அமுலில் இருந்தது; இவையெல்லாம் இருந்த பொழுதும் கூட கொலை வெறியாட்டம் நடந்தது. அதனால்தான் போலீசும் இக்கொலை வெறியாட்டத்திற்கு உடந்தையாக இருந்தது என்பது வெளிப்படுகிறது.

ஆகஸ்ட் 6ம் தேதி காலை தலித் இளைஞர்கள் சிலர், தங்கள் வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த ரெட்டிகளை தாக்கி காயம் ஏற்படுத்தியதாக ஒரு தகவல் கூறுகிறது. மூன்று ரெட்டிகள் வெட்டிக் கொலை செய்யப்பட்டதாக ஊதிப் பெருக்கி மேல்சாதியினர் பொய் வதந்தியைப் பரப்பினர். சுண்டூரிலுள்ள மேல்சாதியினர் மொதுக்கூர் ரெட்டிகளை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டனர்; தலித்துகளைத் தாக்கத் தயாராக இருக்கும்படி கேட்டுக் கொண்டனர். அதற்குள் வலிவேரு, மஞ்சாலா மூன்னாங்கிவாரிப்பாலம், வெள்ளத்துரு ஊர்களிலுள்ள மேல்சாதியினரும் தலித்துகளைத் தாக்க அணிதிரட்டப்பட்டனர்.

காலை 11 மணியளவில், சாய்பாபுவும், வேமுரு சப்-இன்ஸ்பெக்டர் ஷேக் மதார்வலியும் தலித் இருக்கும் பகுதிக்கு வந்தனர்; தலித்துகளை ஊரைவிட்டு ஓடச் சொன்னார்கள், ஏனெனில் மங்களகிரியிலிருந்து வரும் மத்தியச் சிறப்புக் காவல் படையினர் (RPF), மேல்சாதியினர் கொடுத்துள்ள வழக்கின் பேரில் தலித்துகளை எந்த நேரத்திலும் வந்து கைது செய்யக் கூடும் என்றார்கள். தலித்துகள் ஊரைவிட்டுச் செல்ல தயங்கிய போது, கிட்டத்தட்ட போலீசு அவர்களை விரட்டி அடித்தது. இருந்தாலும் தலித் பெண்கள் எல்லோரும் ஊரிலே தங்கிவிட்டார்கள்.

தலித்துகள் தாங்கள் ஒரு மரணவலையில் வீழ்கிறோம் என்று அறியாமல் வயல்வெளிகளில் ஓடினார்கள். மேல்சாதியினர், ஊரின் எல்லா மூலைகளிலிருந்தும் தலித்துகளைச் சூழ்ந்து கொண்டு விரட்டி அடித்தனர். டிராக்டர்களிலும், ஸ்கூட்டர்களிலும் கொலை வெறியர்கள் வந்தார்கள்; முதலில், ஓடிய தலித்துகளைப் பிடித்து இரும்புக் கம்பிகளால் அடித்தனர்; கத்திகளாலும் கோடாரிகளாலும் குத்திக் கொன்றனர். பின்பு மெதுவாக ஒருசில பிணங்களை கோணியில் கட்டி துங்கபத்ரா வடிகாலிலும், பாசனக் கால்வாயிலிலும் வீசி எறிந்தனர். கால்வாயை ஒட்டிய மல்லிகைத் தோட்டத்தில் ஒளிந்திருந்த தலித்துகள் மூவரை கண்டுபிடித்து வெட்டி வீழ்த்தினர். பிணங்களை அங்கேயே போட்டுவிட்டனர்.

கொலைகாரர்களுடன் போலீசும் டிராக்டரில் உட்கார்ந்து கொண்டு தலித்துகளைத் துரத்தியதாக தலித் பெண்கள் பலர் குறிப்பிட்டார்கள். தலித் ஆண்களை வெளியே விரட்டியடித்த பின்பு தலித் குடியிருப்பிலேயே பல போலீசுக்காரன்கள் இருந்தார்கள். மேல்சாதிக் கொலைக்காரக் கும்பலால் படுகொலை செய்யப்படும் தலித்துகளின் மரண ஓலத்தைக் கேட்டும், காது இருந்தும் செவிடர்களாக இருந்தனர்.

60 வயதான சம்பூர்ணா நினைவு கூர்வது போல... ''அருகில் இருந்த மல்லிகைத் தோட்டத்திலிருந்து எங்கள் ஆண்கள் கதறுவதைக் கேட்டேன். நான் போலீசுக்காரன்களிடம் சென்று முறையிட்டேன். எங்கள் ஆண்களை ரெட்டிகளிடமிருந்து காப்பாற்றுங்கள் என்று



படிப்பகம்

கெஞ்சினேன். ஆனால், என் கெஞ்சலை போலீசுக்காரன்கள் கேட்கவில்லை. எங்கள் ஆண்கள் யாராலும் தாக்கப்படவில்லை; வேலை செய்கிற போது வயலில் பாடுகிறார்கள் என்றான்கள், போலீசுக்காரன்கள்.'' வயதான அம்மா மீண்டும் மீண்டும் கெஞ்சிய போது ஒரு போலீசுக்காரன், ''உன்னிடம் சாம்பலைத் தவிர என்ன இருக்கிறது. நாங்கள் ரெட்டிகளை ஆதரித்தால் பணக் கத்தை பெறுவோம்'' என்றான். பலியான ஒருவரின் மனைவி பின்பு தேம்பியவாறு சொன்னது போல, ''போலீசுக்காரன்கள் மட்டும் இல்லையென்றால், எங்கள் ஆண்கள் கிராமத்திலேயே தங்கியிருந்திருப்பார்கள். எத்தகைய தாக்குதலையும் சமாளித்து இருப்பார்கள். போலீசுக்காரன்கள்தான் எங்கள் இனத்தவரை கொன்றான்கள்.''

உண்மையிலேயே, அன்று காலை தெனாலி அரசு மருத்துவமனையிலுள்ள யாக்கோபைப் பார்க்கத் தலித்துகள் பெரும்பாலானோர் சென்றுவிட்டனர். போலீசு தலித் குடியிருப்பில் புகுந்து ஓடச் சொன்ன போது 40 முதல் 50 பேர் தான் கிராமத்தில் இருந்தனர்.

தலித் பெண்கள் தங்கள் ஆண்கள் உயிருக்கு ஆபத்து என்று தெரிந்து இருந்தாலும் கூட, அவர்களால் தாக்குதலின் தன்மையை அளவிட முடியவில்லை. தாக்குதலிருந்து தப்பி சிலர் நள்ளிரவில் திரும்பி வந்தனர். எவ்வாறு மேல்சாதியினர் ஓடிய தலித்துகளை கொன்று குவித்தார்கள் என்று அவர்கள் விவரித்த போதுதான் தாக்குதலின் தன்மையை அளவிட முடிந்தது.

18 வயதான தயாரி தனராஜ் சாவிலிருந்து மயிரிழையில் தப்பி விடுகிறார். மேல்சாதிக் கும்பலின் காட்டுமிராண்டித்தனத்தை தெளிவாக விளக்குகிறார் அவர். ''போலீசு எங்களை ஓடச் சொல்லிய பின், நானும் வேறு சிலரும் ரயில்வே பாதையை நோக்கி ஓடினோம். ரயில் பாதையில் சில நிமிடங்கள் ஓய்வு எடுத்தோம். ஆனால் அதற்குள் ரெட்டிகள் எங்களை நெருங்குவதைக் கண்டு மீண்டும் தலைதெறிக்க ஓடினோம். நான்கு கிலோ மீட்டர் தூரம் மொதுக்கூரு ரெட்டிகளின் வயல்களை நோக்கி ஓடினோம். மொதுக்கூர் ரெட்டிகள் எங்களுக்காக காத்திருந்தது தெரியாது. அங்கே, மண்டுரு ரமேஷையும், தேவரப்பள்ளி ஜெயராஜையும் ரெட்டிகள் சமாளித்து பிடித்துவிட்டனர். இரண்டு பேரையும் எல்லோர் முன்பும் வெட்டிக் கொன்றதை நான் தப்பி ஓடிக் கொண்டிருக்கும் போதே பார்த்தேன்.''

இன்னுமொரு கி.மீ. தூரம் ஓடிய தனராஜை, வேறொரு ரெட்டி கும்பல் பிடித்தது. அங்கேயே கம்பிகளாலும், தடிகளாலும் தனராஜ் அடிக்கப்பட்டார். அவருடைய காலை முறுக்கி ஓடவிடாமல் செய்தனர். அங்கேயே அப்போதே தனராஜை கொன்றிருப்பார்கள், ஆனால் ஊனமுற்ற மேல்சாதிக்காரனான மல்லிகார்ஜுன் ரெட்டிக்கு ஒரு 'பலிகடா'வாகத் தருவதற்காக ஒரு கொடூரமான மரணபயத்தால் தனராஜ் வைக்கப்பட்டிருந்தார்; மல்லிகார்ஜுன ரெட்டி ஒரே ஒரு தலித்தையாவது தனது கையாலேயே கொல்ல வேண்டுமென்று ஆசைப்பட்டான். தனராஜ் வலியால் துடித்துக் கொண்டிருக்கும் போதே, தனராஜ் உடம்பிலிருந்து குறைந்தது ஒரு பாட்டில் ரத்தத்தை மேல்சாதிக் கும்பல் எடுத்துவிட்டது. தனராஜை வயலிலே விட்டுவிட்டுச் சென்றது. தனராஜின் 'இறுதிக் காரியத்தை' செய்வதற்காக மல்லிகார்ஜுன ரெட்டியை அழைத்து வர மேல்சாதியினர் சுண்டூருக்கு வண்டிகளில் சென்றுவிட்டனர். தனராஜ் எப்படியோ சமாளித்துக் கொண்டு கால்வாயில் குதித்தார். ஆலப்பாடு நோக்கி நீந்திக் கொண்டு சென்றார். அங்கே தலித் பெண்கள் சிலர் தனராஜை காப்பாற்றினார்கள். நள்ளிரவில், தனராஜ் பெண் போல் உடை அணிவிக்கப்பட்டு, சுண்டூர் ரயில் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டார். பின்பு தெனாலி அரசு மருத்துவமனையில் தனராஜ் கொண்டு போய் சேர்க்கப்பட்டார்.

தனராஜோடு போருகட்டா சம்மையா (50), பொன்தாகினி ஜக்காரியா (52) ஆகிய இருவரும் தாக்குதலில் காயம் அடைந்தனர். ஜக்காரியாவும், இன்னும் இருவரும் ஊரை விட்டு ஓடிக் கொண்டிருந்த போது, வயதான ஜக்காரியா, ரெட்டி இளைஞர்களால் தாக்கப்

www.padippakam.com

பட்டார். "ஊரை விட்டு ஓடிய போது ஓர் ஆர்.டி.சி. பேருந்து வருவதைப் பார்த்தோம். ஆனால் எங்கள் எதிரிகள் அதில் பயணம் செய்கிறார்களென்று எங்களுக்குத் தெரியாது. வண்டியின் மேல் சுமார் 15 பேர் கோடாரிகள், கத்திகள், இரும்புக் கத்திகளுடன் அமர்ந்திருந் தனர். எங்களைப் பார்த்தவுடன் பேருந்தை நிறுத்தி கீழே இறங்கினர். வயதான என்னால் ஓட முடியவில்லை. மற்ற இருவரும் சமாளித்து ஓடித் தப்பிவிட்டனர். அக்கும்பல் என்னை அடித்து கூழாக நொறுக்கி, என்னை நடுரோட்டில் போட்டு விட்டுச் சென்றுவிட்டது," என்று ஜக்காரியா நினைவு கூர்கிறார்.

அண்மையில்தான் அரை ஏக்கர் நிலம் வாங்கியிருந்த 40 வயது ரூபன், தனது வயலில் ஜலதி இமானுவேல், ஜலதி மத்தாயா (அண்ணன், தம்பிகள்) மல்லேலா சுப்பாராவ் ஆகியோ ருடன் வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது தங்கள் ஊர் தலித்துகள் ஓடுவதை அவர்கள் கண்டனர். ரூபன் தூங்கபத்திரா வடிகாலில் நீந்திக் கடந்து ஓடிவிட்டார். அப்போது இமானுவேல், மத்தாயா, சுப்பாராவ் ஆகியோர் மல்லிகைத் தோட்டத்தில் ஒளிந்து கொண்ட னர். இதை கவனித்த மேல்சாதிக்காரன் ஒருவன், வண்டிகளில் போய்க் கொண்டிருந்த கொலை வெறியர்களிடம் கூறிவிட்டான். மல்லிகைத் தோட்டத்தில் தேடிய அவர்கள் மூன்று தலித்துகளையும் கொஞ்ச நேரத்தில் கண்டுபிடித்து, சித்திரவதை செய்து கொன்று போட்டனர்.

இமானுவேல் உடம்பு முழுவதும் குத்தப்பட்டிருந்தார். அவருடைய காது வெட்டி துண்டிக்கப்பட்டிருந்தது. கழுத்தில் ஆழமான காயம் ஒன்று இருந்தது. சுப்பாராவின் கைக ளில் ஒன்று, அவர் கொல்லப்படுவதற்கு முன் வெட்டி எறியப்பட்டிருந்தது. உண்மையி லேயே, இமானுவேல், மத்தாயா, சுப்பாராவ் ஆகியோரின் உடல்கள்தான் தலித்துகளால் ஆகஸ்ட் 7ம் தேதியன்று முதலில் கண்டுபிடிக்கப்பட்டன. எந்தப் பெரிய நிகழ்ச்சியும் ஆகஸ்ட் 6ல் நடக்கவில்லை என்று அதுவரைக்கும் போலீசு அதிகாரிகள் மறுத்து விட்டனர். இதற்கிடையில் காணாமல் போன பலரைத் தலித்துகள் தேடத் தொடங்கினர். ஆகஸ்ட் 8 அன்று வடிகாலிலும், பாசனக் கால்வாயிலிலும் மேலும் 5 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அங்காலக்குடுரு ராஜமோகனின் உடல் சாக்கில் கட்டப்பட்டு வடிகாலில் கிடந்தது. சற்று தள்ளி ஜலதி ஜசக்கின் உடலும் சாக்கில் கட்டப்பட்டுக் கிடந்தது. சுங்குரு சாம்சன், தேவரப் பள்ளி ஜெயராஜ் ஆகியோரின் உடல்கள் சுண்டூரிலிருந்து 10 கி.மீ. தள்ளியுள்ள இந்தூர் மடையில் கிடந்தன. மண்டுரு ரமேஷின் உடல் மொதுக்கூர் -ஆலப்படு சாலையிலுள்ள ஒரு கிளைக் கால்வாயில் கண்டு எடுக்கப்பட்டது.

எல்லாத் தலித்துகளின் உடல்களும் தலித்துகளின் தனிப்பட்ட முயற்சியிலேயே கண்டு எடுக்கப்பட்டன. போலீசு பெருமளவு குவிந்திருந்த போதும் எவ்வித உதவியும் அளிக்க வில்லை. மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டு உடல்களைத் தேடிய 23 வயது கிஷோரின் கூற்றுப்படி, ஆகஸ்ட் 8ந் தேதி மாலை, 5 உடல்கள் மிதந்து சென்றதை சுண்டூரிலிருந்து 25 கி.மீ. தள்ளியுள்ள காரியப்பாலம் என்ற ஊரருகே உள்ள மீனவர்கள் கண்டதாக தெரிவித்த னர்.

ஆகஸ்ட் 7 அன்றே பெரும்பாலான தலித்துகள், பெண்கள் உட்பட சுண்டூரிலிருந்து ஓடிவிட்டனர். தெனாலியின் இடாநகர் கிறித்துவ மத இரட்சிப்புப் படை ஆலயத்தில் தஞ்சம் புகுந்தனர். 35 வயது பரிசுத்தராவ் தன் இளைய தம்பி மண்டுரு ரமேஷின் உடலை தெனாலி அரசு மருத்துவமனையில் கண்டார். பார்த்தபின் அதிர்ச்சியுற்று மாரடைப்பால் இறந்தார்.

நான்கு நாட்களுக்குப் பின், தலித்துகள் சுண்டூரிலேயே தங்கிப் போராடுவது என்ற முடிவோடு சுண்டூர் திரும்பினார்கள். அதிலிருந்து அவர்கள் கண்டனப் பொதுக்கூட்டங்கள், உண்ணாவிரதங்கள் ஆகியவற்றின் வாயிலாக தங்களைத் தாக்கிய குற்றவாளிகள் எல்லோ ரையும் கைது செய்ய வேண்டும் என்று கோரிப் போராடுகிறார்கள். தங்கள் கோரிக்கைகள்



படிப்பகம்

நிறைவேறும் வரை அரசின் எந்த உதவியையும் ஏற்க மாட்டோம் என்று முடிவெடுத்துள்ள னர்.

## ஆய்வு முடிவுகள்

1. போலீசின் ஊக்கமான ஒத்துழைப்பின்றி இப்படிப்பட்ட காட்டுமிராண்டித் தனமான தாக்குதலை மேல்சாதியினர் நடத்தி இருக்க முடியாது. போலீசு, தலித்துகளை ஊரைவிட்டு விரட்டியதன் வாயிலாக மேல்சாதியினருக்கு எளிதான தாக்குதல் இலக்குகளாக்கியிருக்கி றது. கொலைவெறியாட்டம் நான்குமணிநேரம் நடந்திருப்பினும் கூட ஒரு போலீசுக்காரன் கூட அதனைத் தடுப்பதற்கு ஒன்றுமே செய்யவில்லை. மாறாக சில போலீசுக்காரன்கள் மேல்சாதி கொலைகாரர்களுடன் 'டிராக்டர்'களில் கூட்டாக உட்கார்ந்து இருந்தாக தலித்து கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

2. இந்நிகழ்ச்சி பட்டப் பகலில் நடந்திருந்தாலும் கூட, இக்கொலைகளை, போலீசு மறுநாள் வரை மூடிமறைத்துவிட முயன்றது; மறுநாள் வரை குற்றவாளிகளை கைது செய்ய முயலவே யில்லை. உடல்களைத் தேடவும் எவ்வித முயற்சியும் போலீசு எடுக்கவில்லை. தலித்துகள் தான் உடல்களை கண்டுபிடித்து, விசாரணை நடத்துவதற்கு போலீசிடம் ஒப்படைத்தனர்.

3. கொலைகளுக்கு முன் ஒரு மாத காலமாக நடந்த எல்லா நிகழ்ச்சிகளிலும் மேல்சாதியி னர் மேல் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முயலவில்லை. தலித்துகளே தாக்கப்பட்டாலும் கூட வழக்குகள் அவர்கள் மேலேயே பதிவு செய்யப்பட்டன.

## கோரிக்கைகள்

1. 1989ல் இயற்றிய தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் (மீதான கொடூரங்களின் தடுப்புச்) சட்டத்தின்படி தலித்துகளுக்கென்று தனிச் சிறப்புப் பிரிவு நீதிமன்றத்தை தெனாலி யில் அரசு அமைக்க வேண்டும்.

2. தெனாலி டி.எஸ்.பி, தெனாலி கிராமிய சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மற்றும் 5 சப்-இன்ஸ்பெக்டர்கள் நிகழ்ச்சி நடந்தபொழுது சுண்டூரில் இருந்தனர். ஆதலால் அங்கிருந்த போலீசு அதிகாரிகளை எல்லாம் கைது செய்யப்பட வேண்டும். குற்றத்தை தூண்டியதற்காக வேலையிலிருந்து இவர்களை விலக்கிய பின் விசாரணை செய்து தண்டிக்கப்பட வேண்டும்.

3. தலித்துகளின் கொலையில் சம்பந்தப்பட்ட முக்கியமான குற்றவாளிகள் அனைவரை யும் போலீசு கைது செய்ய ஆவன செய்ய வேண்டும். அல்லது முதல்வர் வாக்களித்தபடி குற்றவாளிகளின் சொத்துக்களையெல்லாம் பறிமுதல் செய்யப்பட வேண்டும்.

4. காணாமல் போன 9 தலித்துகளையும் எங்கே இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க எல்லா முயற்சிகளும் எடுக்க வேண்டும்.

**இறந்தோரின் பட்டியல்:**

1. ஜலதி மத்தாயா (40)
2. ஜலதி இமானுவேல் (38)
3. மல்லேலா சுப்பா ராவ் (35)
4. ஜலதி ஐசக் (25)
5. அங்காலக்குடுரு ராஜ்மோகன் (25)
6. சுங்குரு சாம்சன் (28)
7. தேவாரப்பள்ளி ஜெயராஜ் (30)

www.padippakam.com

*8. மண்டுரு ரமேஷ் (21)*
*9. மண்டுரு பரிசுத்தராவ் (35) [மாரடைப்பால் இறந்தவர்]*

**காயமுற்றோரின் பட்டியல்:**

*1. போருகட்டா சம்பையா (50)*
*2. பொன்தாகினி ஜக்காரியா (52)*
*3. தயாரி தனராஜ் (25)*

**காணாமல் போனவர்கள்:**

*1. ஜலதி மதுசூதனன் (35)*
*2. ஜலதி பிரகாஷ்ராவ் (30)*
*3. தப்பேட்டா பாபு (24)*
*4. பெரிக்காலா தேவதாஸ் (30)*
*5. காளஹஸ்தி சின்னா (22)*
*6. அலூரி திப்பையா (35)*
*7. சத்ரகட்டா பசவையா (30)*

*மற்றும் இருவர்*

★ ☆ ★

## ஆந்திராவில் தலித்துகள் மீது அண்மையில் நடந்த பெருந்தாக்குதல்கள்

| | நடந்த இடம் | நாள் | நிகழ்ச்சியின் தன்மை |
|---|---|---|---|
| 1 | கரம்சேடு (பிரகாசம் மாவட்டம்) | 17.07.'85 | மேல் சாதியினரின் கூட்டுத் தாக்குதலில், ஆறு தலித் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மூன்று பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். |
| 2. | ஹசனாப்பூர் (அதிலாபாத் மாவட்டம்) | 13.06.'85 மற்றும் 18.07.'85 | அதிலாபாத் எம்.எல்.ஏ.வுக்கு நெருங்கிய உறவினர்களான நிலப்பிரபுக்கள் வண்ணான், சவரத் தொழிலாளி இனத்தைச் சார்ந்த இருவரை இவ்விரு தேதிகளில் கொன்றனர். |
| 3. | அவ்தாத்பூர் (மேடக் மாவட்டம்) | 17.01.'86 | தெலுங்கு தேசக் கட்சியைச் சேர்ந்த நிலப்பிரபுக்கள் தலித்துகளின் 30 வீடுகளைத் தீக்கிரையாக்கினர். |
| 4. | நீரு கொண்டா (குண்டூர் மாவட்டம்) | 15.07.'87 | மேல்சாதியினரின் கூட்டுத் தாக்குதலில் முதிய தலித் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார். |
| 5. | குடியாடா (விஜயநகரம் மாவட்டம்) | 20.07.'87 | மேல்சாதியினரின் கூட்டுத் தாக்குதலில் தலித் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார். |



படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| 6. தொண்டாலி (நெல்லூர் மாவட்டம்) | 27.08.'87 | மேல்சாதிக் கும்பலொன்றின் தாக்குதலில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். |
| 7. சிராலா (பிரகாசம் மாவட்டம்) | 13.08.'87 | கரம்சேடு கொலை வழக்கில் முக்கிய சாட்சியாக இருந்த ஒருவர் கரம்சேடு கொலைகாரர்களால் கொல்லப்பட்டார். |
| 8. பண்டிலாப்பள்ளி | 27.11.'87 | மேல்சாதிக் கும்பலின் தாக்குதலால் நான்கு தலித்துகள் அடித்து கத்தியால் குத்திக் கொல்லப்பட்டனர். |
| 9. கோடவட்டிக்கல்லு (கிருஷ்ணா மாவட்டம்) | 02.02.'88 | தலித் தொழிலாளி ஒருவர் நிலப்பிரபுவால் கொல்லப்பட்டார். |
| 10. பீர்னாக்கல்லு (நெல்லூர் மாவட்டம்) | 19.01.'89 | பஞ்சாயத்துத் துணைத் தலைவராக இருந்த தலித் ஒருவர் தெலுங்கு தேசக் கட்சி நிலப்பிரபுக்களால் கொல்லப்பட்டார். |
| 11. கோகராஜுபள்ளி (கிருஷ்ணா மாவட்டம்) | 16.01.'89 | தலித் தொழிலாளி ஒருவர் நிலப்பிரபுக்களால் கொல்லப்பட்டார். |
| 12. தங்குடூர் (பிரகாசம் மாவட்டம்) | 3.3.'89 | மேல்சாதியைச் சேர்ந்த தெலுங்கு தேசக் கட்சிக்காரன் ஒருவனால், தலித் பெண் ஒருவர் கற்பழிக்கப்பட்டு, உயிரோடு எரித்து கொல்லப்பட்டார். |
| 13. ஜாபர் கூடம் (ரெங்கா ரெட்டி மாவட்டம்) | 27.04.'89 | தெலுங்கு தேசக் கட்சி நிலப்பிரபுவின் அடியாள் ஒருவனால் தலித் ஒருவர் கொல்லப்பட்டார். |
| 14. பிப்பாரா (மேற்கு கோதாவரி மாவட்டம்) | 4.07.'89 | கிராமப் பஞ்சாயத்துத் தலைவரது தலைமையில் மேல்சாதியினர் தலித் ஒருவரைக் கொன்றனர். |
| 15. சின்னக்கதா (விஜியநகரம் மாவட்டம்) | 31.07.'89 | சாராய வியாபாரியின் அடியாட்களால் ஒரே குடும்பத்தில் உள்ள பழங்குடியினர் நால்வர் கொல்லப்பட்டனர். |
| 16. புள்ளிவெண்டுலா (கடப்பா மாவட்டம்) | 16.02.'90 | காங்கிரஸ் பஞ்சாயத்துத் தலைவன் ஒருவன் தலைமையில் வந்த கும்பல் பழங்குடியினரின் 150 வீடுகளைத் தீ வைத்து கொளுத்தி நாசமாக்கியது. |
| 17. காஞ்சி கச்சேரியா (கிருஷ்ணா மாவட்டம்) | 19.03.'90 | நிலப்பிரபுக் குடும்ப இளைஞன் தலித் பண்ணைத் தொழிலாளியைக் கொன்றான். |
| 18. ஜுருபாலேம் (ஸ்ரீ காகுளம் மாவட்டம்) | 21.05.'90 | காங்கிரஸ் கட்சி நிலப்பிரபு ஒருவனின் உத்தரவால் கிட்டத்தட்ட 180 மீனவர்களின் வீடுகள் கொளுத்தப்பட்டன. |



படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| 19. குட்லுப்பாடு (மேற்கு கோதாவரி மாவட்டம்) | 19.05.'90 | மேல்சாதிக் கும்பலால் தலித் இருவர் கொல்லப்பட்டனர். |
| 20. ரெட்டிப்பள்ளி (ரெங்காரெட்டி மாவட்டம்) | 12.02.'90 | உள்ளூர் எம்.எல்.ஏ.வுக்கு நெருங்கிய நிலப்பிரபுவின் அடியாட்கள் பழங்குடி விவசாயி ஒருவரை உயிரோடு கொளுத்தினர். |
| 21. கொதப்புல வண்டலப்பள்ளி (அனந்தப்பூர் மாவட்டம்) | 6.07.'90 | மேல்சாதிக்காரர்கள் தலித் ஒருவரை உயிருடன் கொளுத்தினர். |
| 22. கஸ்பா கடபவலசா (விஜியநகரம் மாவட்டம்) | 22.11.'90 | மேல்சாதிக் கும்பலால் நான்கு பழங்குடியினரும், அரிஜன் ஒருவரும் கொல்லப்பட்டார்கள். |
| 23. சில்லக்கல்லு (கிருஷ்ணா மாவட்டம்) | 28.11.'90 | தலித் போலீஸ் எஸ்.ஐ ஒருவர், சர்க்கிள் இன்ஸ்பெக்டரின் சாதிக் கொடுமை தாளாது சுட்டுக் காண்டு தற்கொலை செய்து கொண்டார். |
| 24. மூடுரல்லாப்பள்ளி (கர்னூல் மாவட்டம்) | 18.03.'91 | மேல்சாதிக் கும்பலால் தலித் தொழிலாளி ஒருவர் அடித்து, கத்தியால் குத்தப்பட்டு கொல்லப்பட்டார். |
| 25. திம்ம சமுத்திரம் (பிரகாசம் மாவட்டம்) | ஜனவரி '91 | தலித்துகள் தெலுங்கு தேசக் கட்சியின் தலைவருக்கு ஆதரவாக இருந்ததால் மேல்சாதிக்காரர்களால் தாக்கப்பட்டனர். ஊரை விட்டே துரத்தப்பட்டனர். |
| 26. சுண்டூர் (குண்டூர் மாவட்டம்) | 6.08.'91 | ஆறு கிராமங்களிலுள்ள மேல்சாதியினரால் குறைந்தது 8 லிருந்து 20 தலித்துகள் கொல்லப்பட்டனர். |
| 27. கோகராஜுபள்ளி (கிருஷ்ணா மாவட்டம்) | 3.08.'91 | தலித் தொழிலாளி ஒருவர் மேல்சாதியினரால் கொல்லப்பட்டார். |

**குறிப்புகள்:**

1. இப்பட்டியல் மேல்சாதிக்காரர்களால் தலித் பெண்கள் கற்பழிக்கப்படுவதை முழுமையாக உள்ளடக்கியிருக்கவில்லை. இதுவே தலித்துகளின் மீது மிகப் பொதுவான தாக்குதல் வடிவம்; ஆனால் மிகக் குறைவாகவே வெளியில் தெரியப்பட்டது.

2. கடைசிக் கட்டத்தில், பலியானவர்களின் சாதிப்பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. அவைகளை மாலா/ மடிகா தாழ்த்தப்பட்ட சாதியினர் என்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

3. இப்பட்டியல், பொதுமக்களின் கவனத்திற்கு வந்தவற்றை மட்டுமே கொண்டுள்ளது.

□

படிப்பகம்

www.padippakam.com



● வயலில் கிடக்கும் ஒரு தலித்தின் உடல்
முன் அட்டை: '91 ஆக.15 தலித்துகள் நடத்திய கண்டன நிகழ்ச்சி

‘சுண்டூர் படுகொலைகள் தலித்துக்களுக்கும், தலித்துக்களின் விடுதலைக்குப் போராடுபவர்களுக்கும் ஓர் அரிய பாடத்தைக் கற்றுக் கொடுத்திருக்கிறது. பொருளாதார ரீதியிலும் கல்வி ரீதியிலும் முன்னேறி விடுவதாலேயே தலித்துக்கள் சுயமரியாதையையும், சமூகத் தகுதியையும், சமூக சமத்துவம் - விடுதலையையும் அடைந்துவிட முடியாது. ஆயுதந்தாங்கிய ஓர் அரசியல் புரட்சியின் மூலமாக அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றாமல் தலித்துக்கள் உண்மையான விடுதலையைப் பெறவே முடியாது. அடிமை வாழ்வில் இருந்து விடுபடவே முடியாது. எல்லா மாயைகளையும் களைந்து விட்டு அத்தகைய புரட்சிக்கு அணி திரள்வோம் என்பதுதான் சுண்டூரில் உயிர் பலி கொடுத்த தலித்துகளுக்கு நாம் செலுத்தும் வீர வணக்கமாகும்.’

www.padippakam.com

RSYF வெளியீடு: 2
முதற்பதிப்பு: டிசம்பர் 25, 1991.

■

வெளியிட்டோர்:
புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி
**(REVOLUTIONARY STUDENTS & YOUTH FRONT)**
தமிழ்நாடு

■

அச்சிட்டோர்:
எழில் பிரிண்ட்ஸ், சென்னை-600 024.

■

விலை: ரூ.1.50

■

பிரதிகளுக்கு:
ஆர்.சீனிவாசன்,
45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம், சென்னை-600 049.

■

தொடர்புக்கு: